Shabra (7)

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ கெவி தர்மா
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள் மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை
ரூ 2. 50

மங்களவைபவங்களுக்கேற்ப, உடுபுடைவைகள்
RASI
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர் 4 விபவ ஆடு மாசி மீ 20 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 றஜப் பிறை 24 (03-03 1989) UTHAYAN -A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 75

## தமிழ் - சிங்கள பகுதிகளின் எல்லைகளில்

# இலங்கை - இந்தியப் படைகள்

# கூட்டு நடவடிக்கை!

### வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் தகவல்

கொழும்பு, மார்ச். 3

தமிழ், சிங்கள பிரதேசங்களின் எல்லைப்புறக் கிராமங்களில் வசிக்கும் மக்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்குவதற்காக இலங்கை, இந்திய இராணுவப் படையினர் இனிமேல் கூட்டாகத் தேடுதல் நடவடிக்கைகளில் (Flush-out Operation) ஈடுபடுவார்கள்.

வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்ன இத்தகவலைத் தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தை அடுத்துநேற்றுக்காலை ராஜாங்க அமைச்சில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன, இந்திய அமைதிப் படையின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ எஸ், கல்கத்துடன் நேற்று முன்தினம் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்தே கூட்டு நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்துக்குக் கிடைத்திருக்கும் தகவல்களின்படி தற்போது கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள அடர்ந்த காடுகளுக்குள் ஆயுதபாணிகள் மறைந்திருப்பதாகத் தெரிகிறது

எனவே அவர்களை அந்தப் பகுதியிலிருந்து களைந்து விடுவதற்காக இந்திய இராணுவமும் இலங்கை இராணுவமும் கூட்டாக இணைந்து தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றன.

இரண்டும் சந்திக்கும்

இந்தத் திட்டத்தின்படி வடபகுதியிலிருந்து இந்திய இராணுவத்தினரும் தென்கிழக்குப்பகுதியிலிருந்து இலங்கை இராணுவத்தினரும் ஒரே இலக்கை நோக்கி நகர்ந்து வருவார்கள்.

இவ்விதம் முன்னேறி வரும் படைகள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்திக்கும்.

இந்த அடிப்படையில் இந்தக் கூட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

புதிய படை

இதே வேளையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ்சேவைகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு, கல்முனைப் பகுதிகளுக்கு நடக்கும் பஸ்சேவைகள் மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளன. (ஒ-10)

## பாண்டியன்குளம் பகுதியில் 3 நாட்களுக்கு ஊரடங்கு

மாங்குளம், மார்ச் 3

பாண்டியன்குளம் பகுதியில்மூன்றுநாட்களுக்கு ஊரடங்குச்சட்டம் அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம்திகதி அறிவிக்கப்பட்ட ஊரடங்கு இன்றுவரை அமுலில் இருக்கும் எனத் தெரிய வருகிறது.

இப்பகுதி சுற்றிவளைத்துத் தேடுதல் நடைபெறுவதோடு, வீடு வீடாகச் சோதனைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளது. போக்குவரத்துச் சேவைகளும் இப்பகுதியூடாக நடைபெறவில்லை. (ஒ 94)

## பிரசவ விடுமுறை இனிமேல் 3 மாதம்

கொழும்பு. மார்ச் 3

பெண் அரசு ஊழியருக்கு இனி 3 மாதகால பிரசவ விடுமுறை வழங்கப்படும்

அமைச்சரவை நேற்று இப்படித் தீர்மானித்தது.

சர்வதேச மாளிர் தினமான இம்மாதம் 8 ஆம் திகதி முதல் இத் தீர்மானம் அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டது.

## வாழ்க்கைச் செலவுப் புள்ளி

கொழும்பு, மார்ச் 3

குடிசன மதிப்பு, புள்ளி விவரத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட பெப்ரவரி மாதத்திற்கான வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் 780 8 ஆகும் என்று அறிவிக்கப்படுகிறது. [உ-எ]

## தெற்கில் 2 நாட்களில் 18 பேர் சுட்டுக்கொலை

### நான்கு பேர் சகோதரர்கள்

கொழும்பு, மார்ச் 3

தெற்கில நேற்று முன்தினம் நள்ளிரவில் இருந்து நேற்றுக் காலைவரை இடம்பெற்ற வன்செயல்களில் 18 பேர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

அனுராதபுரத்தில் 6 ஜே. வி. பி யினர் பிரா இயக்கத்தினரால் கொல்லப்பட்டனர்.

வெலிமடையில் 2 பேரும் பாணந்துறையில் ஒருவரும் ஜே வி பியினரால்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ★ சனத்தொகையில் 60 வயதினர் சாதனை

கொழும்பு. மார்ச் 02

இலங்கை சனத்தொகையில் பத்து லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் 60 வயதானவர்கள் என்று அறிவிக்கப்படுகிறது

இந்த எண்ணிக்கை நூற்றாண்டு முடிவில் 16 லட்சமாக அதிகரித்துவிடும். சர்வதேச வயது கூடியவர்கள் உதவி நிறுவனத்தின் ஆசியப் பிராந்திய பிரதிநிதி பிலே இரேய்க் தெரிவித்தார். (ஓ எ)

## வல்லையில் நேற்றுமுன்தினம் மோதல்

வல்வெட்டித்துறை மார்ச் 3

வல்வெட்டித்துறை பழைய நகரசபைக் கட்டடத்திற்கு முன்பாகவுள்ள பகுதியில் கடந்த புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் மோதல் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

இந்தியப்படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தவர்களுக்கும் இடையில் இம்மோதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதல் சம்பவத்தின்போது இடையில் சிக்கி இரண்டு பொதுமக்கள் படுகாயம் அடைந்தனர்.

எஸ் மரியநாயகம் (வயது 40), எம் திருஞானசம்பந்தன் (வயது 64) ஆகியோரே காயமடைந்தவர்களா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ★ வடகொழும்பு

## மருத்துவக் கல்லூரி தேசியமயமாகும்

கொழும்பு, மார்ச் 3

வடகொழும்பு மருத்துவக் கல்லூரியை தேசியமயமாக்குவது என்று அமைச்சரவை நேற்றுத் தீர்மானித்தது

எனினும் தற்போது படித்துக்கொண்டிருக்கும் மாணவர்கள் தமது 6 வருட படிப்பை முடிப்பதற்கு வழி செய்யப்பட வேண்டும் என செய்யப்பட்ட சிபார்சையும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முனி



ரூபவாஹினி பார்க்கிறவைக்கு அப்ப பெரிய அதிர்ஷ்டம் என்டு சொல்லு... மொழிப் பிரச்சினை இருக்காது பின்னை......!

## ★ இந்தியாவின்

## பாக். தூதுவராக டிக்ஸிற் நியமனம்

புதடில்லி, மார்ச் 3

இலங்கைக்கான இந்தியத் தூதராகச் செயற்பட்டுவந்த ஜோகேந்திரநாத் டிக்ஸிற், பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டார்.

பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதராக கடமையாற்றிய திரு. எஸ். கே. சிங் இந்திய வெளியுறவுத் துறைச் செயலாளராக நியமிக்கப்பட்டதை அடுத்து, அவரது இடத்திற்கு திரு. ஜே என். டிக்ஸிற் நியமிக்கப்பட்டார். (உ)

## யாழ். மாவட்டத்துக்கு

## நூறு இணைப்புகள் கொண்ட தொலைபேசி பரிவர்த்தனைப் பிரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ்ப்பாண மாவட்டத்தில் நூறு தொலைபேசி இணைப்புகளைக் கொண்ட புதிய பரிவர்த்தனைப் பிரிவொன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்குத் தேவையான கருவிகளையும் உபகரணங்களையும் இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொலைத் தொடர்புத் திணைக்கள வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

1988 ஆம் ஆண்டு ஆயிரம் இணைப்புக்களைக் கொண்ட தொலைபேசி பரிவர்த்தனைப் பிரிவு ஒன்றை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

இதற்குத்தேவையான நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதிலும் போதுமான அளவு நட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இணுவில் சம்பவங்கள்:

## உணவில் நஞ்சு என்று வைத்திய அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 3

இணுவில் பகுதியில், கடந்த செவ்வாய்க்கிழமை மதிய உணவு சாப்பிட்ட பின்னர் சுகயீனமுற்றவர்கள் உட்கொண்ட உணவில் நச்சுத்தன்மை கலந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அவர்கள் உட்கொண்ட உணவில் நச்சுத்தன்மை கலந்திருந்தமையாலேயே உடல்நிலை பாதிக்கப்பட்டதாக வைத்திய அறிக்கையில் தெரிவிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை - இந்திய

## நட்புறவு உடன்படிக்கை நகல் தயாராகி விட்டது

இந்திய - இலங்கை நட்புறவு உடன்படிக்கை நகல் தயாராகிவிட்டது.

வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன இதனைத் தெரிவித்தார்.

நகல் உடன்படிக்கையை நான் படித்துக் கொண்டிருக்கின்றேன்

அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு அதுவிரைவில் சமர்ப்பிக்கப்படும்.

அதன்பின்னர் நகல் உடன்படிக்கை இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

— இப்படி அமைச்சர் தெரிவித்தார். (உ எ)

## நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு 9ம்திகதி

கொழும்பு. மார்ச் 3

நாட்டின் ஒன்பதாவது புதிய நாடாளுமன்றத்தை ஜனாதிபதி பிரேமதாஸ வருகிற 9 ஆம் திகதி காலை 10-30 மணிக்கு அங்குரார்ப்பணஞ் செய்துவைத்துப் பேசுவார்.

அன்று காலை 8 45 மணிக்கு சபை கூடும். சபாநாயகர் தெரிவு முதலில் நடக்கும். பின்னர் புதிய எம். பிக்களுக்கு சபாநாயகர் பதவிப்பிரமாணம் செய்து வைப்பார்.

அதன் பின்னர் சபை பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தலைவர் ஆகியோரைத் தெரிவு செய்யும்.

அதனை அடுத்து சபை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ரி. வி. நிகழ்ச்சிகளை விரும்பிய மொழியில் கேட்டு ரசிக்க வாய்ப்பு

கொழும்பு மார்ச் 3

தொலைக்காட்சியில் (ரி.வி) வரும் நிகழ்ச்சிகளை விரும்பிய மொழியில் கேட்டு ரசிக்கும் வாய்ப்பு பொதுமக்களுக்குக் கிடைக்கவிருக்கிறது.

உதாரணத்திற்கு, ஆங்கில மொழியில் ஒரு நிகழ்ச்சி தொலைக்காட்சியில் காட்டப்படுகிறது.

இந்நிகழ்ச்சியைத் தமிழ் ரசிகர்கள் தமிழ்மொழியில் கேட்டு ரசிக்கலாம். சிங்கள ரசிகர்கள் சிங்கள மொழியில் கேட்டு ரசிக்கலாம்.

இதற்கு தொலைக்காட்சிப் பெட்டியில் கருவி ஒன்றைப் பொருத்துவதன் மூலம் ரசிகர்கள் அந்த வசதியைப் பெற முடியும். ரூபவாஹினி ரசிகர்களுக்கு விரைவில் இந்த வசதி கிட்டும். தமிழ், சிங்கள ஒளிபரப்புக்களையும் தமக்கு விருப்பமான மொழியில் ரசிகர்கள் கேட்கமுடியும்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் குமார் ரூபசிங்கா இத்தகவலை வெளியிட்டார். (ஓ-எ)

## சுபநேரம்

03-03-1989
மாசி-20
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
06 27முதல் 07.57வரை
ராகுகாலம்:
10.57முதல் 12.27வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## கண்ணி வெடித்தது!

யாழ்ப்பாணம், மார்ச் 3

கொக்குவில், பொற்பதி வீதியில் நேற்று முன்தினம் நிலக் கண்ணி ஒன்று வெடித்தது. ஆனால் சேதம் எதுவும் ஏற்படவில்லை

அமைதிப்படை உயர் அதிகாரிகளின் ஜீப் சென்ற சில நிமிடங்களில் கண்ணி வெடித்ததாகக் கூறப்பட்டது. (ஓ)

## வடக்கு - கிழக்கில் தமிழ் ஆட்சி மொழி

திருகோணமலை, மார்ச் 3

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழ் ஆட்சி மொழியாகும் இதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் உடனடியாக எடுக்கப்படும்.

வடக்கு — கிழக்கு மாகாண சபைக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டதாக முதலமைச்சர் திரு. அ வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல அரசாங்க ஊழியர்களும் தமக்கிடையிலான கடிதத் தொடர்புகளையும் தமிழிலேயே வைக்குமாறு பணிக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பாவித்த தளபாடங்கள் Divon [Hall] set Dressing Tables, kitchen பொருட்கள் linen, Almerah, Chess of drawers Easy chair, Dinner set, tables கிடாரங்கள் பெட்டகம் மற்றும் பல சாமான்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி த. சங்கரப்பிள்ளை, கனகசபை வீதி, மானிப்பாய். (9629)

தவக்காலத்திற்கு ஏற்ற சிலுவைப்பாதை ஒப்பாரிபசாம் திருமணித்தியாலம் செபமாலைத் தியானம் புத்தகங்கள் மற்றும் பசாம் ஒலிப்பதிவு நாடாக்கள் கிடைக்குமிடம்: புனித சித்தாத்திரை மாதா செபமாலை கிறோர்ஸ், 140, கருவில் வீதி, ஊர்காவற்றுறை. (9612)

பாவித்த தளபாடங்கள், அலுமாரி, செற்றி, கட்டில், Gas Cooker, T. V. மெஷின் புத்தக அலுமாரிகள், றேடியோ, காரியாலய மேசை, சாப்பாட்டு மேசை, கதிரை மற்றும் பல உடன் விற்பனைக்கு உண்டு. V. சிவராம், 69 அம்மன்றோட், கந்தர்மடம்; [9719]

சங்கானை முருகமூர்த்தி ஒழுங்கையை முகப்பாய்க் கொண்ட 8 பரப்பு பலங்காணியும் அத்துடன் சேர்ந்த தென்னம் பிள்ளைக் காணியும் (கிணற்றுடன்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி கண்மணி 'ராமாவாசா' சங்கானை. (9628)

### கார் விற்பனைக்கு

EN இலக்கமுடைய A. 50 கார் உடன் விற்பனைக்கு உண்டு (விலை குறைந்த வாகனத்துக்கு மாற்றுவதும் விரும்பத்தக்கது.) தொடர்பு;- அ. கனகசிங்கம், ஆனந்தன் விடியோ சென்ரர், மானிப்பாய். (C/1725)

### கோழி எரு

கோழி எரு விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- சிமோட்டி பாம் மயிலங்காடு, சுன்னாகம் [C/1726]

### LOVE BIRDS விற்பனைக்கு

Love Birds விற்பனைக்கு உண்டு தொடர்பு: கொள்ளவும்; 27/1, No 16, மணிக்கூட்டு வீதி, B. M C Lane, யாழ்ப்பாணம். (9627)

### FOR SALE

New Hoover electronics 1100, Washing Machine, Pressure cooker K D K Sanyo fans Electrickettle TAT Celingfan Rgulator Raleigh bike made in England, Honda M D 90 and Pomenarian Drgs: No 180, Navalar Road Jaffna (9718)

### கோழிக்குஞ்சு விநியோகம்

கறுப்பு பிளிமத்சேவல் குஞ்சு (3 3 89 வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்க. இல: 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (9657)

Golden comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் வெள்ளிக்கிழமை 3ஆம் திகதியும் Hyline வெள்ளை கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் கறுப்புச் சேவற்குஞ்சுகள் 2ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்க; சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரப்படி லேன், கொக்குவில். [9624]

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

நாற்பத்தைந்து நாட்களில் வளர்ச்சியடையும் [Dekalb] பிறவுண் சேவல் 3 ஆம் திகதி, 4 ஆம் திகதி 5 ஆம் திகதி, 6 ஆம் திகதி, 7 ஆம் திகதி, 8 ஆம் திகதி வரை ஒவ்வொரு நாளும் விநியோகிக்கப்படும். விலை ரூபா 4/50; உடன் பெற்றுக் கொள்ளவும். இல 9 கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (9630)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

நாற்பத்தைந்து நாட்களில் வளர்ச்சியடையும் (Dekalb) பிறவுண் சேவல் குஞ்சு விலை ரூ4/50 பேட்டுக்குஞ்சும் (8-3-89) புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல 9, கந்தையா லேன், சுன்னாகம் புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (9658)

### NEW CITY TRADERS

சகல விதமான சுவர் மணிக்கூடுகள்: கைக் கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள், Film roll வகைகள் சூட்கேஸ், Travelling bags, School bags, Wheel bags, எவர்சில்வர் பொருள்கள் Glass மற்றும் அன்பளிப்புப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள New City Traders 135, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் (C/ 536

### தேவை

லொறி றைவர், கிளினர், மனேச்சர் தேவை: தொடர்பு க. சிவலிங்கம் 25, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். (9631)

### தவறிவிட்டது

மயில்வாகனம் சிவகுமார் ஆகிய எனது அடையாள அட்டை இல: 530911799 V தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் உரிய விலாசத்தில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (9717)

### சேவை

Type Writers தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும். அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள் Fudo Enterprises 39/17 மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். [Samy & Co Shabra அருகாமையில்) (C/1362)

### கடை குத்தகைக்கு

யாழ் நகரில் மாநகரசபை எல்லைக்குள் உதிரிப்பாகம் விற்கும் கடை ஒன்று குத்தகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு:- த. இராமநாதன் சைவபள்ளிக்கூட முன் ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் (9626)

### பாலராசிரியர் பயிற்சி

பாலராசிரியர் சங்கம் நடாத்தும் பாலராசிரியர் பயிற்சி நெறி-1989 எதிர்வரும் 4 - 3 - 1989 சனிக்கிழமை மு.ப 8.30க்கு ஆரம்பமாகின்றது க. பொ. த. (சா/த) சித்தியடைந்த பெண்கள் சேரலாம், சனி ஞாயிறு விடுமுறைத் தினங்களில் நடைபெறும், பெற முடியாதோர் தபால்வழியிலும் பயிலலாம். வகுப்பு நடைபெறும் இடம்: உயர்கலைக்கல்லூரி ஆனைப்பந்தி 73, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (9625)

### A/L CLASSES

A/L 89, 90, 91 விஞ்ஞான பாடங்கள் அனுபவம் முதிர்ந்த பட்டதாரி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும். B. G Institute of Science 214 Palaly Road Kantharmadam Junction, Jaffna (9701)

### BECON A/L

வர்த்தகமும் நிதியும்
சி. இரட்ணம்
வினாவிடை வகுப்பு
(1979 – 1989)
(யாவும் அச்சடித்த குறிப்பு வழங்கப்படும்)
முழுப்பாடத் திட்டமும் முடிக்கப்படும்

Sat — Sun
2 00 — 3.00

Mon, Wed, Fri
12 00 — 1 00
ஆரம்பம்
(C-1763)

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

## கேள்வி அறிவித்தல்- 1989

15-03-1989 தொடக்கம் 31 - 12 - 1989 வரையிலான காலப்பகுதிக்கு உடுவில் சந்தை, சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை, சருவாட்டுக் கடைகள் ஆகியவற்றிற்கான கேள்விகள் 10 03-89ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். உரிய பணத்தைச் செலுத்தி 08 03-89 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய விபரங்களை இவ்வலுவலகத்தில் சாதாரண வேலைநாட்களில் பெற்றுக்கொள்ளலாம்

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,

வலிகாமம் தெற்கு பிரதேசசபை.
சுன்னாகம்.
1. 3. 1989 (C/1752)

"பட்டதாரிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்"

## இலங்கை நிர்வாக சேவை (S.L.E.A.S) 2ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை

1989 மே மாதம் 13ஆம் திகதி நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான

**விசேட பயிற்சி வகுப்புகள்**

பல தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் இணைந்த சேவை

**ஆரம்பம்: 11 - 3 - 89 பி.ப 1.00 மணி**

பாடநெறி.
(1) கிரகித்தல், (2) நுண்ணறிவுத்தேர்வு
(3) பொது வினாத்தாள்.

தகைமைகள்:

இலங்கைப் பிரஜையாகவும், பட்டதாரியாகவும், 22 30 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்

யாவரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 10 - 3 - 89**

* விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்.
* கட்டணம் ரூபா 250.00 [முழுப் பயிற்சிக்கும்]
* இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவங்களையும் விபரத்திரட்டினையும் எம்மிடம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

**ASTAN INSTITUTE**
166/1, Hospital Road, - Jaffna.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)
(C/1758)

## பொது மக்கள் கவனத்துக்கு

எமது பிரதேசத்தில் 'பனம் சாராயம்' என்று சொல்லி கசிப்பை உற்பத்தி செய்து விற்பதில் சமூக விரோதிகள் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்கள் மக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதிப்பதோடு, மக்கள், சமூகத்தையே நாசமாக்குகின்றார்கள். இந்த சமூக விரோதச் செயலையிட்டுப் பொதுமக்கள் விழிப்பாகவிருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்,

பனம் சாராயம் விஞ்ஞான முறைப்படி பனை அபிவிருத்திச் சபையாலும் சபையின் ஒத்துழைப்போடு தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாகவும் உற்பத்தி செய்யப்பட்டு உரிய லேபல்கள் ஒட்டப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்பதையும் மக்களுக்கு அறியத் தருகின்றோம்.

கசிப்பு நஞ்சுக்கு சமம்

அதை ஒழிப்பது நம்ஒவ்வொருவருடைய கடமையாகும் பொதுமக்களே! இளைஞர்களே! விழிப்பாகவிருங்கள்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
(C/1628)

## உடனடி வேலைவாய்ப்பு

● **Saudi Arabia**

சவூதி அரேபியாவில் கூலியாட்கள் தொடக்கம் சகல தராதரங்களிலும் உள்ள வேலையாட்கள்

**உடன் தேவை**

**வெற்றிடங்கள் பல உண்டு**

● **குவைத்**

★ கிளீனேர்ஸ் — ஆண்கள்
★ றைவர் — கனரக வாகனம் வீட்டுச்சாரதி

● **தாய்வான்**

★ தொழிற்சாலை ஊழியர்கள்
● இரண்டு வருட ஒப்பந்தம்
சம்பளம் — 350US டொலர்
● வயது 18 — 30 வயது வரை

● **யப்பான்**

**வேலை வாய்ப்பு**

[1] கட்டட மேற்பார்வையாளர்
[2] கட்டட மின்னிணைப்பாளர்
[3] எயாகொண்டிசன் மெக்கானிக்
[4] பிளம்பர்
[5] வெல்டர்
[6] கம்பி கட்டுபவர்
[7] கிறேன் ஒப்பரேற்றர் (ரவர் கிறேன்)
[8] சவல ஒப்பரேற்றர் (மேபின் கிறேன்)
[9] (F.பேர்கிளிப ஒப்பரேற்றர்
[10] தச்சு வேலையாட்கள்
[11] மேசன்
[12] சாரதிகள்
[13] கனரக வாகனச் சாரதிகள்
[14] சமையற்காரர்
[15] உதவிச் சமையற்காரர்
[16] கட்டடப்பகுதி கூலியாட்கள் உதவியாளர்

சம்பளம் —
500 அமெரிக்கன் டொலர்

● இரண்டு வருட ஒப்பந்தம்
● வயது 20 — 42 வயது வரை

**RESTAURANT**

[17] உதவியாளர்
[18] வெயிற்றர்
● வயது 26க்குட்பட்டது

சம்பளம் —
700 அமெரிக்கன் டொலர்

● சாப்பாடும் தங்குமிட வசதியும், வைத்தியச் செலவுகளும் இலவசம்.

மேலதிக விபரங்களுக்கும் கீழ்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

**T. V. TRAVELS**
Brown Road,
**KOKUVIL.**

[1] K. நவரட்ணம்
19, சிவன் பண்ணை வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

[2] S. காராளசிங்கம் [யப்பான்]
25, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
[C-1753]

## அறிவித்தல்

### திருக்கேதீஸ்வரம் தேவஸ்தானம்

திருக்கேதீஸ்வரம் தேவஸ்தானத்தின் பெயரைச் சொல்லி சிலர் தவறான வழியில் பணம் வசூலித்து வருவதாக நம் அறிகின்றோம் திருக்கேதீஸ்வர தேவஸ்தானத்தின் பெயரால் திருப்பணி ஒருக்கோ உற்சவங்களுக்கோ பணம் வசூலிப்பதற்கு எவருக்கும் எம்மால் அனுமதி அளிக்கப்படவில்லை, எனவே திருக்கேதீஸ்வர தேவஸ்தானத்திற்கு நிதியுதவி செய்ய விரும்பும் அன்பர்கள் நேரடியாக திருக்கேதீஸ்வரம் தேவஸ்தானத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

முகாமைக்குழு,
திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை.
[9722]

## அகதிகள் புனர்வாழ்வு நிதியம் - 1983

### காரியாலய இடமாற்ற அறிவித்தல்


மேற்படி காரியாலயம் இல. 73 "பிருந்தாபவனம்" கண்டி வீதி, சுண்டிக்குளியிலிருந்து 01 - 03 - 89 ஆம் திகதி புதன் கிழமை தொடக்கம் பின்வரும் விலாசத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

**No. 148, முதலாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்.**

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் - 1983
No. 148, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

வ. பரமசிவம்,
காரியாலய பொறுப்பதிகாரி
(C-1627)

## 50ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**அப்புத்துரை பாலசுப்பிரமணியம்**

தோற்றம்: 5- 11- 1958
மறைவு 14- 01- 1989

செல்வம் சேர்ந்துவர
செங்கடலில் அனுப்பி வைத்தோம் - உன்னை
சின்னபாலா
நீ
சேர்ந்த இடம் எவ்வுலகம்
எங்கள் செல்வமே – சின்னபாலா
தாய் மனமோ பற்றி எரியுதையா
உடன் பிறந்த உள்ளங்கள் வேகுதையா
அன்புகொண்ட நெஞ்சங்கள் அலறுதையா
ஆவியை நீ ஏன் துறந்தாய் சின்னபாலா
உன் பூமுகமும் வாடியதோ சின்னபாலா
பொன்னுடலைக் காணவில்லையே –
எங்கள் செல்வா
பாவிகள் நாம் தவிக்கின்றோம் பாச மகனே
உன் பூமுகமும் புன்னகையும் எங்கே மகனே!

உன் பிரிவால் வாடி உள்ளத்திலால் உதிர்ந்து போகும் உன் அன்பு நெஞ்சங்களின் கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்குகின்றோம் உன் ஆத்ம சாந்திக்காக!

அளவெட்டி பிரதான வீதியில் இல 5- 4 - 3 - 89 இல் நடைபெறும் அன்னாரின் நினைவஞ்சலியில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தவர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாய், சகோதரர்கள்,
(9724) மருமக்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**NEW SCIENCE ACADEMY**
B.M.C. முன்பாக JAFFNA.

A/L 89

**DAY PAPER CLASS**

**PHYSICS**
BY
Mr. மணியம்

**ELECTRO STATICS**
Mon, Wed. FRI 7.00 a.m.
ஆரம்பம்: 3 - 3 - 89 7.00 a.m.

**SOUND**
ஆரம்பம்: 6 - 3 - 89 9 00 a.m
Mon, Wed 9 00 a.m.

**WEEKEND CLASS**

**ELECTRICITY**
ஆரம்பம்: 4 - 3 89- 8.30 a m
Sat, Sun 8 30 a.m

**LIGHT**
நடைபெறுகின்றது
Sat, Sun 7 30 a m
(C/1744)


இலங்கை வங்கிக் கிளைகளில்

# ஞாயிற்றுக்கிழமைகளில்

## நிவாரணக் கொடுப்பனவு இல்லை

யாழ்ப்பாணம், மார்ச். 3

இலங்கை வங்கிக் கிளையில் இனி ஞாயிற்றுக் கிழமைகளில் நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டா.

இதனை நிறுத்தும்படி இலங்கைவங்கியின் தலைமைக்காரியாலயம் உத்தரவிட்டுள்ளது.

கொடுப்பனவுகளை வேறு ஒரு தினத்தில் வழங்குவதற்கு வங்கி நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

(இ- 10)

# யாழ். வந்த பயணிகளுக்கு சோதனை மேல் சோதனை

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்ஸை சீருடை அணிந்த ஆயுதக் கோஷ்டி ஒன்று வழிமறித்தது.

அப்போது அவ்வழியே ஒன்றன்பின் ஒன்றாக வந்த மூன்று பஸ்கள் மோதிக்கொண்டன.

பஸ்கள் சேதமடைந்தன. எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இதனை அடுத்து அக் கோஷ்டியினர் மறைந்து விட்டனர்.

இச்சம்பவம் நடந்த திங்கட்கிழமை இரவு நொச்சியாகமவில் இடம் பெற்றது.

விபத்துக்குள்ளான பஸ்களில் ஒன்று யாழ் நோக்கி பயணத்தைத் தொடர்கையில் ஈரப் பெரியகுளம் பகுதியில் மீண்டும் ஒர் ஆயுதக் கோஷ்டியினர் வழிமறித்தனர்,

அவர்கள் பஸ் நடத்துனரிடம் இருந்த பணத்தை அபகரித்ததுடன், பஸ்ஸின் கண்ணாடிகளையும் அடித்து உடைத்தனராம் (ஒ-163)

### உடைந்து வீழ்ந்த வீடு

குருநகர், மார்ச். 3

வீடொன்றின் ஒரு பகுதி திடீரென்று உடைந்து வீழ்ந்தது. அருகில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களும், வீட்டில் படுத்திருந்த ஒருவரும் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

இச்சம்பவம் திங்கட் கிழமை குருநகர் மத்திய மேற்கு வீதியில் இடம் பெற்றது. (இ-51)

### முல்லைமாவட்டம் 20 நிலையங்களில் பரீட்சை

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருபது பரீட்சைநிலையங்களில் தற்போது ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சை நடைபெற்றுவருகிறது.

முள்ளியவளையில் 6 பரீட்சை நிலையங்களும், முல்லைத்தீவில் 8 பரீட்சை நிலையங்களும் புதுக்குடியிருப்பில் 4 பரீட்சை நிலையங்களும் மாங்குளத்தில் பரீட்சை நிலையங்களும் இயங்குகின்றன.

மாங்குளம் பரீட்சை நிலையங்களில் மாங்குளம் ஒலுமடு, கரிப்பட்ட முறிப்பு, மல்லாவி, யோகபுரம்வவுனிக்குளம் பாண்டியன் குளம் நட்டாங்கண்டல் பாடசாலை மாணவ - மாணவிகள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர், (இ-94

# திருத்த முடியாத பஸ்களை வெளியாருக்கு விற்கும்

## நடைமுறைக்கு முற்றுப்புள்ளி

கொழும்பு, மார்ச் 3

திருத்தமுடியாத அளவுக்குப் பழுதாகிவிட்டது என்றுகூறி அரசபஸ்களை வெளியாருக்கு விற்பனை செய்யும் நடைமுறைக்குப் போக்குவரத்துஅமைச்சர் விஜயபால மென்டிஸ் முற்றுப் புள்ளி வைத்தார்.

திருத்திச் சேவைக்கு விடக்கூடியதான பஸ்களும் விற்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தனியார் பஸ் முதலாளிகள் இப்பஸ்களை 'நம்ப முடியாத அளவு' விலைக்கு வாங்கிப் பின்னர் திருத்தி சேவைக்கு விடுவதும் விசாரணையில் தெரியவந்திருக்கிறது என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இபோச டிப்போக்களில் தேங்கிக் கிடக்கும் அலுமினியக் கழிவுகளையும் வெளியாருக்குவிற்க வேண்டாம் என்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

அமைச்சர் மென்டிஸ் பதவியேற்ற பின்னர் பிராந்திய போக்குவரத்துச்சபைகளுக்கு அனுப்பிய முதலாவது உத்தரவு இதுவாகும். (இ-எ)


உ
சிவமயம்

## பிறந்தநாள் வாழ்த்து



★ செல்வன் பிரதீபன் ★

வேலணையைச் சேர்ந்த திருவாளர் நா: இராசதுரை - புனிதவதி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் செல்வன் பிரதீபன் தனது முதலாவது பிறந்த நாளை (3-3-89) இன்று வெகு விமரிசையாக தனது இல்லத்தில் கொண்டாடுகின்றான். அவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அன்ரி, பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணன்மார், அக்காமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் பீப்பிள்குறேசறி (கொழும்பு) ஊழியர்கள் அனைவரும் ஸ்ரீநாகபூஷணி அம்மன் அருளால் பல் கலையும் கற்று, சுகதேகியாக பல்லாண்டு வாழ மனமார வாழ்த்துகின்றனர்.

[9399]



**A/L விஞ்ஞான மாணவர்களுக்கு**

ஆரம்பம்; 04 - 03 - 1989

**90 பொறியியல்**

Sat & Sun — 10:30 — 11:30

ஆசிரியர்:- Mr. ரவீந்திரநாதன் (B. Sc.)

3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(C-1746)



பைரா (BIRAHA)
(F)பாம் புரொய்லர்
கோழி இறைச்சி



ஏகவிநியோகஸ்தர்:
மெடிக்கல் ஹோல்
இல 224, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். ☎ 22575



# ஏழாவது ஆண்டு நிறைவு

# NALLUR VIDEO CENTRE

*The Popular Name for Quality and Latest*

**ORIGINAL**

★ TAMIL ★ ENGLISH

# VIDEO FILMS

யாழ் நகரில் முதன்மைபெற்ற ஸ்தாபனமாக மிளிர்ந்து இணையற்ற மக்கள் சேவை புரிந்து

**எட்டாம் ஆண்டில் காலடி வைக்கும்**

**இவ்வேளையில்**

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரது ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாடி நிற்கிறோம்

★ அன்றும் ★ இன்றும் ★ என்றும்

மனங்களுக்கேற்ப தரமான படப்பிரதிகளை வாடகைக்குப் பெற நாடுங்கள்

★ நல்லூர் வீடியோ சென்ரர் ★

19, முருகேசர் லேன், நல்லூர், யாழ்ப்பாணம்.

(C/1633)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொம்பியூட்டர் பயிற்சி

**Diploma in Computer Programming**

**Basic ✱ Advanced Basic ✱ Cobol**

Courses are Commencing!

on 5-3-89 (9.00a.m.) Weekend & Week day

Initial Fee 400/- Duration 2 1/2 Months

Practicals are given in IBM, APPLE, LASER, SHARP COMPUTERS & Recognized Certificate will be issued after the Exam.

**IDP Computer Centre,**
342, K. K. S Road,
**JAFFNA.**

● மல்லாகம் கிளையிலும் சில பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

(9669)


# காந்தீயத்தை வளர்ப்பதில் அறவழிப் போராட்டக் குழு முழுக் கவனம் செலுத்தும்

சாவகச்சேரி மார்ச் 3

காந்தீயத்தை வளர்ப்பதிலும் அதன் இலட்சியங்கள் செயற்பாடுகளை மக்கள் மத்தியில் பரப்புவதிலும் அறவழிப் போராட்டக்குழு தனது முழுமையான கவனத்தைச் செலுத்திவருகிறது. அன்பு, சமாதானம், சகோதரத்துவம் மக்கள் மத்தியில் நிலவ கிராமிய ரீதியில் திட்டமிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தந்தை செல்வா அறங்காவல் குழுவின் தலைவர் பேராசிரியர் க. நேசையா அறவழிப் போராட்டக் குழுவின் பத்தாண்டு சேவை நிறைவு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

கைதடி - நுணாவிலில் உள்ள அறவழிப்பணி மனையில் குழுத்தலைவர் திரு. வி எவ் துரைராசா தலைமையில் வைபவம் ஆரம்பமானது திரு. துரைராசா தனது தலைமை உரையில் கூறியதாவது 'கோயில்களில் வணங்குவதற்கு மறுக்கப்பட்ட நிகழ்சிகளே எம்மை ஸ்தாபன ரீதியில் இயங்கவைத்தது.

அதனை அடுத்து சமுதாயப்பணிகளில் முகம் கொடுத்த நாம் அகதிகள் பராமரிப்பு, புனர்வாழ்வு ஆகிய செயற்பாடுகளில் முழுமையாக உழைத்து வந்தோம்.

இன்றும் தொடர்ந்து புனர் வாழ்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறோம் எனக்கூறினார்.

குழுவின் செயலாளர் திரு.ச. ஜீவகதாஸ் தமது அறிக்கையில் தெரிவித்ததாவது: தமிழ் சமுதாயத்தின் வளர்ச்சிக்குத் தடைகளாகப் பல நூறு ஆண்டுகளாக நிலவி வந்த பல்வேறு சமூக அநீதிகளை அயராத பணிகள் போராட்டங்கள், மூலம் இல்லாமல் செய்திருக்கிறோம். ''என்றார்.

சமூகசேவை உதவிப் பணிப்பாளர் திருமதி க. சிவசிதம்பரம், திரு. மு கணபதிப்பிள்ளை, திரு.கே. கோபாலகிருஷ்ணன் நகராட்சி மன்ற விசேட ஆணையாளர் திரு.த. நவரத்தினராசா ஆகியோர் ஆசி உரைகள் வழங்கினர்.

அங்கவீனர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டதுடன் புலமைப்பரிசில் திட்ட மாணவர்களுக்கான பரிசில்களும் சிறுவர் இல்லமாணவர்களுக்கான கல்வி உபகரணங்களும் வழங்கப்பட்டன.

சிறப்பு நிகழ்ச்சியாக குழுவில் நீண்டகாலம் பணியாற்றிய பத்துப் பேர் கௌரவிக்கப்பட்டனர். (ச-31)

# இந்து சமய அறிவுப் போட்டி

கொக்குவில், மார் 3

ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கும் அகில இலங்கை இந்து இளைஞர் பேரவையின் மாநாட்டை ஒட்டி இலங்கை ரீதியான இந்து சமய அறிவுப்போட்டிகள் பல யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றன.

இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் அகில இலங்கை ரீதியாக இந்து இளைஞர் மன்றங்கள் ஊடாகக் கோரப்பட்டுள்ளன.

பாலர்பிரிவு கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேல்பிரிவு, ஆகிய நான்கு பிரிவுகளாக இப்போட்டிகள் இடம்பெறவிருக்கின்றன.

பண்ணிசைப் போட்டி, கட்டுரைப் போட்டி, வினாவிடை எழுத்துப் போட்டி, பேச்சுப் போட்டி, மனனப் போட்டி ஆகியவற்றுடன் கோலமிடல், மாலை கட்டுதல் யோகாசனம் கதாப்பிரசங்கம், ஆகிய போட்டிகளும் இடம் பெறவிருக்கின்றன.

இந்து இளைஞர் மன்றங்களின் ஊடாகவே, இப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (க-169)

## பல்கலைக்கழக வேந்தர்களுடன் சந்திப்பு

கொழும்பு, மார்ச்3

உயர் கல்வி அமைச்சர் ஐனாப் ஏ. சி. எஸ். ஹமீத பல்கலைக்கழகங்களின் வேந்தர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பல்கலைக்கழகங்களை விரைவில் திறப்பது குறித்து அப்போது விரிவாக ஆராயப்பட்டத.

மாணவர் கவுன்சில்களுக்குத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாணவர் கவுன்ஸில் தேர்தல் விரைவில் நடக்க இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். (அ)


அமெரிக்க விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டுமா?
இங்கே வாருங்கள்

**✱ நல்லூர் மக்கள் சனசமூக நிலையம்**

ஆடியபாதம் வீதி நல்லூர்.

(C/1625)


## நாள் மங்கலம்



**K. A. G. ஜதீசன்**

யாழ்ப்பாணம் 3 ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த ரெங்ககுமாரன்-வசந்தி தம்பதியின் கனிஷ்ட புத்திரன் செல்வன் ஜதீசன் தனது முதலாவது பிறந்தநாளை 13 - 01 - 1989 ல் குதூகலமாகக் கொண்டாடி மகிழ்ந்தார்.

இவரை அப்பா, அம்மா, அண்ணன் ஜனகன், அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, சிவா சித்தப்பா, ராஜேஸ்சித்தி, Dr. கண்ணன் பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், சித்திமார், மாமி, மச்சான், உறவினர்கள் அனைவரும் நல்லூர்க் கந்தனையும், தெல்லிப்பளை அம்மனையும் வணங்கி; நீடு வாழ்ந்து மகிழ்ந்து வளர வாழ்த்தினார்கள்.

(9720)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



அமரர்
**கணபதிப்பிள்ளை பரமேந்திரன் (பூவா)**

[முன்னாள் காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன Foreman]

| தோற்றம்:- | மறைவு:- |
| --- | --- |
| 09 - 04 - 1944 | 14 - 02 - 1988 |

திதி:- 03 - 03 - 1989

குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எம்மை எல்லாம் ஆழ்த்துயரில் ஆழ்த்தி விட்டு திடீரென மறைந்து விட்ட அன்புத் தெய்வமே! ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:

உங்கள் பிரிவால் துயருறும்
தாய், மனைவி, பிள்ளைகள்,
மாமா, மாமி, சகோதர சகோதரிகள்
(மனைவியின்) சகோதர சகோதரிகளும்.

(9659)


## உடனடி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு தகுதியுடையவர்கள் 04-03 89 சனி அல்லது 06-03 89 திங்கள் காலை 9 30 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்

1. Room boy
2. Steward
3. Cooks and Kitchen Helpers

**Hotel Gnanams**

299, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C/ 1626)



**NEW SCIENCE ACADEMY**

B. M. C. [illegible] — Jaffna

AL 89
WEEKEND
**PAPER CLASS**
PHYSICS
By
Mr. சோதிலிங்[illegible], B.Sc (Hons)
ELECTROSTATICS
ஆரம்பம்: 4-03-89
Sat — 2.00 p.m

SAT, SUN - 2.00 p.m.

(C-1743)


## முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி
**முத்தாச்சி சுந்தரம்பிள்ளை**

| மலர்வு:- | உதிர்வு:- |
| --- | --- |
| 09 - 06 - 1905 | 13 - 02 - 1986 |

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புப் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

"முத்துமாளிகை"
நாரந்தனை,
ஊர்காவற்றுறை.

(9671)


## வெற்றுச்சாக்கு விற்பனை

எம்மிடம் 7,000 வரை வெற்றுச்சாக்குகள் கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்குண்டு.

விண்ணப்ப முடிவு திகதி 15 - 03 - 1989.

விண்ணப்பங்களிற்காக விண்ணப்பப்படிவங்களை காரியாலயத்தில் 14-03-1989 வரை பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்பத்திரம் ரூபா 10/- செலுத்தி சங்கச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மீளளிப்பு வைப்புப் பணம் ரூபா 300/- ஆகும்.

**பொது முகாமையாளர்,**
க/வடக்கு ப.நோ. கூ. சங்கம்,
பரந்தன்.

(C/1729)


## ஓராண்டு நினைவஞ்சலி



**திரு. சின்னத்தம்பி நாகையா**

| மண்ணில். | விண்ணில்: |
| --- | --- |
| 19 09 - 1914 | 03 - 03 - 1988 |

இல்லத்தின் தலைவனே
ஈடில்லாப் பெரு நிதியே
நிழல் மரமாய் நீ சரிந்து
ஓராண்டு ஆனதின்று!
பேரன்பே! துணையற்றுத்
தவிக்கும் நாம்—
தேவனது திருப்பாதம்
சென்றடைந்தாய் என்றுணர்ந்து
செலுத்துகின்றோம்
எம் இதய அஞ்சலிகள்!

மனைவி, மகன்,
மருமகள், பேரப்பிள்ளைகள்:

நவாலி:

(9662)


## ★ மஹா சிவராத்திரி ★

4 யாம பூஜைகளுக்கும் தேவையான விசேட

அரைத்த ★ சந்தனக் குழம்பு ★ அகில் குழம்பு

கிடைக்குமிடம்:

**சுந்தரம் பிறதர்ஸ்**

173, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ் / பஸ்தரிப்பு நிலையத்துக்கு அருகில்

இங்கு அபிஷேகத் திரவியங்கள், கும்ப திரவியங்கள், ஹோம திரவியங்களும் கிடைக்கும்.

(C/1728)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

நோவற்க நொந்தது
அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து.

**பொருள்:**

நீ ஏழையாகி விட்டதைப் பற்றித் தெரியாதவனுக்குத் தெரியப்படுத்தக்கூடாது. அதைப்போல நீ பலவீனனாகப் போய்விட்டாய் என்பதைப் பகைவர்களிடம் காட்டிக் கொள்ளக்கூடாது.


# உதயன்

உண்மை - நேர்மை - ஒரு நிலை

இல. 192/1 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22078
03. 03 1989 த. பெ. இல23


# கல்வித்துறை மாற்றங்கள்

தமிழ்ப் பகுதிகளின் கல்வி நிர்வாகத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்படுகிறது. அதற்கு முன்னோடியாக உயர் அதிகாரிகளின் பதவிகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்தினதும் கல்வி நிர்வாகத்திற்குப் பொறுப்பாகப் புதிதாகப் பிரதி கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களது பணிகளை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாக ஒரு கல்விப் பணிப்பாளர் பதவியும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

நிர்வாக மாவட்டங்கள், பல கல்விக் கோட்டங்களாகப் பிரிக்கப்படும். அவை அந்தந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகளின் நிர்வாக அலுவல்களை நேரடியாகக் கவனிக்க ஏற்பாடு செய்யப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

கல்வி நிர்வாகத் துறையில் மாற்றம் கொண்டு வருவது வரவேற்கத்தக்கதே. அந்த மாற்றங்கள் கிராமப்புறங்களில் உள்ள சிறிய பாடசாலைகளின் தேவைகளைத் தக்கபடி நிறைவேற்றவும், அவற்றின் கல்வித் தரம் வளர்ச்சி அடையவும் உதவிட வேண்டும்.

சிறிய பாடசாலைகள் எதிர்நோக்கும் ஆசிரியர் பற்றுக்குறை, தளபாடப் பற்றுக்குறை, விளையாட்டு மைதானம் மற்றும் ஆய்வு கூட, நூல்நிலைய வசதிகள் இல்லாமை, போதிய கட்டட வசதிகள் இல்லாமை போன்ற பிரதான குறைபாடுகள் களையப்பட்டாக வேண்டும்.

ஒரு கிராமத்துப் பெற்றோர், தமது பிள்ளைகளை சொந்தக் கிராமத்தில் உள்ள பாடசாலையைப் புறக்கணித்து வேறு பகுதிப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் என்று எண்ணத் துணியாத வகையில் கிராமப் பகுதிப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படுதல் அவசியம்.

அதே போல நகரங்களில் உள்ள பிரபலம் பெறாத பாடசாலைகளையும் பெயர் பெறும் பாடசாலைகளாக மாற்ற வேண்டும்; வளர்க்க வேண்டும்; உயர்த்த வேண்டும்.

என்ன விதமான நிர்வாகச் சீரமைப்பைச் செய்தாலும் சரி, அதிகாரிகளின் கதிரைகளை எப்படி எப்படி மாற்றினாலும் சரி முன் சொன்ன இரண்டு தேவைகளும், இலக்குகளும் சரிவர எய்தப்படாவிடின் அந்தச் சீரமைப்புகளாலும், மாற்றங்களாலும் எவ்வித பயனும் சேரும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

செல்வாக்கும், வசதி வாய்ப்பும் உள்ளவர்களின் பிள்ளைகள் கல்வி வசதி பெறும் அதே வேளை, பொருளாதார வசதியும், சமூகச் செல்வாக்கும் குறைந்த சாதாரண குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகள் கல்வி வாய்ப்பில்லாமல் தொடர்ந்து அடிமட்டத்திலேயே இருக்கும் நிலை நீளுமானால் எந்தச் சீரமைப்புமே சமுதாய சமத்துவத்துக்கு வழிகோலமாட்டாது என்பது மட்டும் நிச்சயம்.

எனவே தமிழ்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கல்வித்துறை மாற்றங்கள், அவை நிர்வாக ரீதியானவையாக இருப்பினும் சரி, கல்வி வளர்ச்சி அல்லது போதனை தொடர்பானவையாக இருப்பினும் சரி அடிமட்டத்திலும், நடுத்தர மட்டத்திலும் உள்ள மக்களின் பிள்ளைகள் சமத்துவ, சம கல்வி வாய்ப்புப் பெற்று உயர வழி வகுக்க வேண்டும் என்பதில் மிக அவதானமாகவும், கவனமாகவும் இருக்க வேண்டும். அப்போது தான் புதிய சமுதாயம் ஒன்றை உருவாக்க ஓர் அடியாவது எடுத்து வைத்தவர்கள் ஆவோம்.

## ஆர்மேனியர்களின் அமைதி ஊர்வலம்

யரவான், மார்ச் 2 சோவியத் யூனியனில் ஆர்மேனியாத் தகராறு ஆரம்பித்து நேற்றுடன் ஓராண்டு பூர்த்தியானது.

அதனை நினைவுகூரும் வகையில் தலைநகரான யரவானில் ஆர்மேனியர்கள் திரளாக மௌன ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

இக்கலவரத்தின் போது 32 ஆர்மேனியர்கள் உயிரிழந்தனர்.

அஸர்பைஜான் மாநிலத்தில் உள்ள நாகொர்னோ கரபா பகுதியை ஆர்மேனியாவுடன் சேர்க்கும்படி கோரி இக்கலவரம் நடந்தது.

தற்போது பிரச்சினைக்குரிய பகுதி மாஸ்கோவின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. (எ)

# கலவரத்தைத் தொடர்ந்து வெனிஸுலாவில் சம்பள உயர்வு

கரகாஸ், மார்ச் 2 வெனிஸுலா நாட்டில் கடந்த இரண்டு தினங்களாக நடந்து வந்த கலவரங்கள் தணிந்து விட்டன. அரசின் பொருளாதாரச் சிக்கன நடவடிக்கை காரணமாக உணவுப் பொருள்களின் விலையில் 20 சதவீத உயர்வு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்தே கலவரங்கள் தோன்றின.

கலவரங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை பற்றி அரசு கூறுவிட்டாலும் குறைந்தது 300 பேர் உயிரிழந்தனர் என்று ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இதனிடையில் வெனிஸுலா அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்போவதாக அறிவித்தது. (எ)

அமெரிக்காவில்

# ஜோன் ரவர் விவகாரம் சூடு பிடிக்கிறது

வாஷிங்டன் மார்ச் 2 என்னில் பிழை காணும் முன்னர் உங்கள் வாழ்க்கையை ஒரு முறை ஆராய்ந்து பாருங்கள்.

அமெரிக்க செனட்டின் ஆயுதக் கமிட்டி உறுப்பினர்களுக்கு முன்னால் செனட்டர் ஜோன் ரவர் முன்கண்டவாறு உபதேசித்தார்.

அதிபர் ஜோர்ஜ் புஷ் தனது பாதுகாப்பு அமைச்சராக திரு. ஜோன் ரவரை நியமித்தார். அவரின் நியமனத்தை அங்கீகரிக்க செனட்டின் ஆயுதக் கமிட்டி முன்னர் நிராகரித்தது.

மித மிஞ்சிய குடிகாரர், பெண்களுடன் தொடர்புகொண்டவர் — ஆகிய குற்றச்சாட்டுக்கள் திரு ரவர் மீது சுமத்தப்பட்டன.

அதன் பின்னர் திரு ஜோன் ரவர், பொதுசன தொடர்பு சாதனங்களுக்கு அளித்த முதலாவது பேட்டியில், பாதுகாப்பு அமைச்சர் பதவியில் நியமிக்கப்பட்டால் பதவியில் இருக்கும் காலம் வரை குடிக்க மாட்டேன் — என்று சத்தியம் செய்தார்.

இருந்தும் ஆயுதக் கமிட்டி அவருக்கு எதிராகவே இன்னமும் அபிப்பிராயம் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் — திரு. ரவர் இரண்டாவது தடவையாக பத்திரிகைகளுக்குப் பேட்டி ஒன்றை அளித்தார்.

அப்பேட்டியில் "ஆயுதக் கமிட்டி உறுப்பினர்கள் என் "குணநலன்களை கொலை" செய்வதில் தான் ஈடுபட்டுள்ளனர். என்னில் பிழைகாணும் முன்னர் தங்கள் வாழ்க்கையை அவர்கள் ஆராய்ந்து பார்க்கட்டும்" — என்று தெரிவித்தார்.

ஆயுதக் கமிட்டி அடுத்த வாரம் கூடி திரு. ஜோன் ரவர் நியமனம் பற்றி இறுதி முடிவு எடுக்க உள்ளது. (எ)

## இஸ்ரவேல் தாக்குதல்

பேரூட். மார்ச், 02 தென் லெபனானில் உள்ள பலஸ்தீன போராளிகளின் முகாம் ஒன்றின் மீது இஸ்ரவேல் படைகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் ஒரு அதிகாரி கொலைப் பட்டார் மூன்று கமாண்டோக்கள் காயமடைந்தனர். (எ)

# யாஸீர் அரபாத்துடன் பேசும் வாய்ப்பு இருப்பதாக இஸ்ரவேல் அறிவிப்பு

டோக்கியோ, மார்ச். 2 எதிர்காலத்தில் ஒரு நாள் பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேச்சுக்களை இஸ்ரவேல் நடத்தும் என்று இஸ்ரவேலிய ஜனாதிபதி செயிம் ஹெறார் ஸோக் தெரிவித்திருக்கிறார்.

வன்செயல்களை கைவிடுவது என்ற பலஸ்தீனின விடுதலை இயக்கத்தின் தீர்மானத்துக்கு அமைய அரபாத்தின் நடவடிக்கைகள் தொடரின் இது சாத்தியமாகலாம் என்று திரு. ஹெறார் ஸோக் ஜப்பானிய கைடோ செய்தி ஏஜன்ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இதேவேளை பலஸ்தீன பிரச்சினை குறித்த சர்வதேச மாநாட்டில் கூட்டுத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பிக்க முன்வரும்படி பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் சிரியா, லெபனான், எகிப்து மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

ஐக்கிய அரபு எமிரேற்சுக்கு விஜயம் செய்த போது அரபாத் செய்தியாளர்களிடம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அடுத்த இரண்டு, மூன்று வாரங்களுக்கு இடையில், பங்குபற்றும் நாடுகளின் தலைநகர்களில் ஒன்றில் கூட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் கூட்டத்தை நடத்தலாம் என்றும் அரபாத் யோசனை தெரிவித்தார். (எ)

## நமீபியாவிற்கு ஐ.நா அமைதிப்படை

வாஷிங்டன், மார்ச் 3 நமீபியாவிற்கு சுதந்திரம் வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு இருந்து வந்த தடங்கல் நீக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

சுதந்திரம் வழங்கும் பணிகளை மேற்பார்வையிடும் ஐ.நா அமைதிப் படையினருக்குத்தேவையான நிதியை ஐ.நா பொதுச்சபை நேற்று ஒதுக்கியது.

41 கோடி 60 லட்சம் டாலர் பணம் ஐ.நா அமைதிப்படையின் நடவடிக்கைகளுக்கு செலவிடப்படும்.

இதைத் தொடர்ந்து நமீபியாவிற்குச் சுதந்திரம் வழங்கும் நடவடிக்கைகள் வருகிற மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பமாக இருக்கிறது. (எ)

# தென் ஆபிரிக்காவில் அரசியல் கைதிகள் விடுதலை

கேட்டவுன், மார்ச் 2 சிறைகளில் விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 280 பேர் நாளை [வெள்ளி] விடுதலை செய்யப்படுவர் என்று தென் ஆபிரிக்க அரசு அறிவித்திருக்கிறது.

நிறவேற்றுமைக்கு எதிராக இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 800 கறுப்பு இனப் பிரமுகர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வரும் தங்களை விடுவிக்க வேண்டும் என்று கோரி சிறைகளில் உண்ணாவிரதம் இருந்து வந்தனர்.

அரசின் உறுதிமொழியின் பேரில் பின்னர் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

இப்போது 280 பேரை விடுவிக்கப்போவதாக அரசு அறிவித்தது. (எ)

## 'கறுப்புப்' பட்டியலில் பர்மா - லாவோஸ்

போதைவஸ்துக் கடத்தல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்காத நாடுகளின் பெயர்களைக் கொண்ட கறுப்புப் பட்டியலில் பர்மாவும் லாவோஸும் இடம் பெற்றுள்ளன.

அமெரிக்கா தயாரித்துள்ள இப்பட்டியலில் ஏற்கனவே ஆப்கனிஸ்தான், ஈரான், பனாமா, சிரியா ஆகிய நாடுகள் உள்ளன.

அனைத்து நாடுகளும் ஒத்துழைத்தால் தான் போதைவஸ்துக் கடத்தலுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றிகாண முடியும் என்று அமெரிக்கா கூறியுள்ளது. (எ)

## யோகாசன நிபுணர் மரணம்

சென்னை, மார்ச் 2 பிரபல யோகாசன நிபுணர் திரு கிருஷ்ணமாச்சாரி நேற்று முன்தினம் சென்னையில் காலமானார்.

இறக்கும் போது அவருக்கு வயது 101.

# சுப்பிரமணிய சுவாமி மீது ஹெக்டே வழக்கு?

என்னைப்பற்றி அவதூறு பரப்பிவரும் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி மீது வழக்குத் தொடருவேன் —

இப்படி கர்நாடக மாநில முன்னாள் முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டே தெரிவித்தார்.

ஹெக்டே முதலமைச்சராக இருந்த போது 150 கோடி ரூபாய் பணத்தை வெளிநாட்டு வங்கியில் போட்டு ஊழல் புரிந்ததாக டாக்டர் சுவாமி குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

"சுப்பிரமணிய சுவாமியின் இந்தக் குற்றச்சாட்டு கற்பனையானது.

இந்த பொய்யான குற்றச்சாட்டை கூறிய சுப்பிரமணிய சுவாமி மீது கோர்ட்டில் வழக்குத் தொடருவேன்" என்று ஹெக்டே கூறினார்.

"சுப்பிரமணிய சுவாமி மீது உண்மையாகவே வழக்கு தொடரப் போகிறீர்களா, அல்லது மிரட்டுவதற்காகக் கூறுகிறீர்களா? என்று கேட்டதற்கு, "உண்மையாகத்தான் கூறுகிறேன்" என்றார்.

"சுப்பிரமணிய சுவாமியின் வாயை மூட நேரம்வந்து விட்டது" என்றும் ஹெக்டே கூறினார். (எ-4)

சிவாராத்திரி தினம்

# திருப்பணிசபை ஒழுங்குகளை மேற்கொண்டு வருகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 3 ஆரும் திகதி திங்கட்கிழமை நிகழவிருக்கும் சிவராத்திரி தினத்தை மிகவும் சிறப்பாகக் கொண்டாட திருக்கேதீச்சர திருப்பணிச்சபையினர் சில ஒழுங்குகளையும் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு கிளிநொச்சி, மன்னார் ஆகிய இடங்களில் இருந்து திருக்கேதீச்சரத்துக்கு விசேட பேருந்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

பக்தர்களின் உணவு, தண்ணீர் பிரச்சினைகளை சிவராத்திரி மட பரிபாலன சபையினரும் மற்றும் மடாலயங்களைச் சேர்ந்தோரும் கவனித்து வருகின்றனர்.

ஆலயத்தில் காலை 6 மணி, பகல் 10 30 மணி பிற்பகல் 3 30 மணிக்கு விசேட பூஜைகளும் இரவில் நான்கு சாமங்களில் அபிஷேகங்களும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஆரும் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் மறுநாள் காலை வரை தொடர்ச்சியாக திருமுறை ஓதல், புராணபடனம், சொற்பொழிவு, நாதஸ்வர இசை ஆகியன நடைபெறும்.

மறு நாளான 7 ஆம் திகதி அமாவாசைத் தினத்தன்று காலை 5 15 மணிக்கு வசந்த மண்டபத்தில் விசேட எழுந்தருளிப் பூஜை நடைபெறும்.

பூஜையைத் தொடர்ந்து சுவாமி காலை ஆறு மணியளவில் பாலாவியில் தீர்த்தத்துக்காக எழுந்தருளுவார்.

யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. நாகேஸ்வரனின் சிறப்புச் சொற்பொழிவும் நல்லூர் சிவசுப்பிரமணியம் பஞ்சாபிகேசன் குழுவினர் நாதஸ்வரக் கச்சேரிகளும் இடம்பெறும். [ச]

# தத்துவங்களை செயலிலும் கடைப்பிடிக்க வேண்டும்

## கருத்தரங்கில் உரை

அன்பு, அஹிம்சை ஆகிய மதங்கள் போதிக்கும் தத்துவங்களையும் கோட்பாடுகளையும் நாம் பேச்சளவில் மட்டுமே வைத்துள்ளோம். செயலில் அவற்றைக் கடைப்பிடிப்பதில்லை. இதனாலேயே இன்றைய உலகில் நிம்மதி கெட்டிருக்கின்றது.

யாழ் பல்கலைக்கழக ஆங்கில உதவி விரிவுரையாளரும் கொழும்புத்துறை புனித சவேரியார் குருமட விரிவுரையாளருமான அருட்திரு ஜெபசீலன் அடிகளார் மேற்கண்டவாறு கூறினார்.

இளைஞர்களுக்கான பொது நிலைக் கழக கருத்தரங்கில் தலைமை உரையாற்றிய அருட்திரு ஜெயசீலன் மேலும் பேசுகையில், இளைஞர்கள் ... உலகின் பல்வேறு பகுதிகளிலும் 148 க்கும் அதிகமான பெரிய சிறிய யுத்தங்கள் நடைபெற்றுள்ளன.

இளைஞர்கள் வழிதவறிச் செல்வதற்கு ஆன்ம பக்தி இன்மையே காரணமாகும். ஒரு விடிவு ஏற்பட தத்துவங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்க வேண்டும் என்றார்.

அருட்செல்வி ஸ்ரெலா உட்பட பலர் உரைநிகழ்த்தினார்கள். (க-111)

## முட்டை விலை வீழ்ச்சி

முட்டை விலை வீழ்ச்சியால் கோழி வளர்ப்போர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சியில் தற்போது முட்டை 1ரூபா 50சதம் ... (இ-160)

# கனடாவில் தாதிமாருக்கு பெரும் தட்டுப்பாடு

ஒன்ராறியோவிலிருந்து எஸ். பாலச்சந்திரன்

ஸ்காபரோ, மார்ச் 2 கனடாவில் தாதிமாருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இங்கிலாந்து, அயர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து தாதிகளை வருவிக்க கனடாவில் உள்ள ஆஸ்பத்திரிகள் முயற்சித்து வருகின்றன.

தாதிகளுக்கு மாதம் 2 ஆயிரம் முதல் 2, 500 கனடியன் டாலர் சம்பளமாக வழங்கப்படுகிறது.

விண்ணப்பிக்கும் தாதிகள் முதலில் கனடாவில் உள்ள College of Nurses of Ontario வில் தாதிகளாகப் பதிவு செய்ய வேண்டும்.

பின்னர் 'சன்னிபுறூக்' போன்ற ஆஸ்பத்திரிகளில் உள்ள வெற்றிடங்களுக்கு மனுச் செய்யலாம்;

கனடாவில் தாதிகளுக்கு மாதாந்தம் சராசரி 2, 000 முதல் 2, 500 கனேடிய டாலர்கள் வேதனமாக வழங்கப்படுகிறது.

தாதிகளாகத் தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வெளிநாட்டவர்கள், தமது சுய விவரம் தொழில் விவரம், அனுபவம், பயிற்சி பெற்ற தகவல்களை கொலிஜ் ஒப் நேர்சஸ் ஒப் ஒன்ராறியோ பதிவுப் பகுதி மேற்பார்வையாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## சிவராத்திரி விரதம்

யாழ் - மடம்வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் 6- ஆம் திகதி திங்கட்கிழமை இரவு மகா சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கபட உள்ளது.

நிலையக்கலை, கலாசாரக் குழுத் தலைவர் திரு. கி. துரைசிங்கம் இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்.

பூஜை, பஜனை வழிபாடுகளுடன் நிலைய முன்றலில் சிறுவர், சிறுமிகளின் நடன நிகழ்ச்சியும் நாடகம், வில்லிசை என்பனவும் அமைதியான முறையில் நடைபெறுமென்று தெரிவித்துள்ளனர். (க-51)

## பூர்த்தியாகும் நிலையில் வீடுகள்

செவன சரண வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பல வீடுகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளன.

செவன சரண நிதித் திட்டத்தின் கீழ் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 90 குடும்பங்களுக்கு வீடுகட்டுவதற்கான நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது (இ-70)

## சேர். கனகசபை பாடசாலைக்கு 3 முதலிடங்கள்

யாழ்ப்பணம், மார்ச் 3 கோட்டக் கல்விப் பிரிவு ரீதியாக நடைபெற்ற இசை, நடன, நாடகப் போட்டிகளில் பன்னாலை சேர். கனகசபை அ. த. க. பாடசாலை மூன்று இடங்களில் முதலாம் இடத்தைப் பெற்றது.

நிகழ்ச்சிகள் வருமாறு: 1 புதிய ஆக்கம் — கனிஷ்ட பிரிவுக் குழு. 2. கிராமிய நிகழ்ச்சி — கனிஷ்ட பிரிவு (தனிப் பெண்) 3. புதிய ஆக்கம் — கனிஷ்ட பிரிவு (தனி ஆண்)

இப்போட்டிகள் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் இடம் பெற்றன. (ஒ)

# கடந்த ஆண்டு தப்பிய கைதிகள் 700 பேர்

கொழும்பு, மார்ச். 03

1988 இல் சிறைகளில் இருந்து தப்பிச் சென்ற கைதிகளின் எண்ணிக்கை 700 க்கு அதிகம் என்று சிறைச்சாலைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு. மகஸின் சிறைச்சாலைகளில் இருந்து 219 கைதிகளும் அனுராதபுரம். பெல்வத்தை சிறைகளில் இருந்து 186 கைதிகளும் தப்பிச் சென்றனர்.

அவர்களில் 120 கைதிகள் மீண்டும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

கைதிகளின் குடும்பப் பிரச்சினைகளும் அதிகாரிகளின் கவனயீனமுமே கைதிகள் தப்பி ஓடுவதற்குரிய காரணம் என்று சிறைச்சாலை அதிகாரி ஒருவர் சொன்னார். (ஒ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உழுந்து மா

பப்படம், தோசை, வடை முதலிய தேவைக்கு பாவிக்கக் கூடிய முறையில் சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப்பட்டு விற்பனையாகின்றது. தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

பெற்றுக் கொள்ள வேண்டிய இடம்:

அண்ணு கோப்பிக்கடை,
யாழ்ப்பாணம்.



# உதயன்

03 . 03 1989 வெள்ளிக்கிழமை



மிளகாய்த் தூள்

யாழ்ப்பாண முறைப்படியும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப்பட்டு
100 gr பக்கட்
1 kg பக்கட்
2 kg பக்கட் நிறைகளில்
விற்பனையாகின்றது தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.
பெற்றுக் கொள்ள வேண்டிய இடம்:

அண்ணு கோப்பிக் கடை,
யாழ்ப்பாணம்.


கோப்பாய் உ. அ. அ. பிரிவைச் சேர்ந்த

## 3, 107 குடும்பங்களுக்கு

## நாளையும் மறுதினமும் நிவாரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கியின் பிரதான கிளையில் மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படும்.

இத்தினங்களிலும் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த மொத்தம் மூவாயிரத்து 107 குடும்பங்கள் நிவாரணப்பணம் பெறவிருக்கின்றன.

நாளை சனிக்கிழமை நிவாரணப் பணம் பெறவிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:—

★ புத்தூர் கிழக்கு—61
★ நீர்வேலி — 971
★ ஊரெழு —188
★ கோப்பாய் வடக்கு — 124
★ இருபாலை - 244

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நிவாரணப் பணம் பெறவிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:—

★ பத்தமேனி — 02
★ இடைக்காடு — 281
★ அச்சுவேலி வடக்கு —202
★ வாதரவத்தை — 46
★ புத்தூர்மேற்கு—189
★ ஆவரங்கால்—34
★ சிறுப்பிட்டி — 357
★ அச்செழு — 397
★ கோப்பாய் — 11

நிவாரணம் பெறுபவர்கள் வங்கிக்கு வரமுன் தத்தமது கிராம சேவையாளரிடம் சென்று தங்கள் தொடர் எண்களை அறிமுக அட்டையில் பதிந்து கொண்டு வங்கிக்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(அடுத்த வாரம் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் இலங்கை வங்கிக் கிளைகளில் நிவாரணப்பணம் வழங்கப்பட மாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது.

3ஆம் பக்கமும் பார்க்க)

(ஒ-ஐ)

## ஸ்ரான்லி வீதி கிளையில்

யாழ்ப்பாணம், மார்ச் 3

நாளை நான்காம் திகதி சனிக்கிழமை யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் மொத்தம் ஆயிரத்து 500குடும்பங்களுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படும்.

நிவாரணம்பெறவிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:-

★ அரியாலை கிழக்கு — 584
★ நல்லூர் வடக்கு — 461
★ கொண்டாவில் மேற்கு — 211
★ கொக்குவில் கிழக்கு — 244

[ஒ ஐ[

## வறுமை ஒழிப்புத் திட்டம்:

## யாழ். மாவட்டத்துக்கு 70 உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ். மாவட்டத்தில் வறுமை ஒழிப்புத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு 70 வெளியகத் தொடர்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள்.

யாழ். செயலக வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

ஓர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஐந்து பேர் கடமை புரிவார்கள். இவர்களில் இருவர் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளாக இருப்பர்.

யாழ். மாவட்டத்தில் நியமிக்கப்படும் 70 பேருக்கும் பயிற்சி அளிக்கவென மூன்று பேர் அரசாங்கத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். (ஒ 5)


## தேவை

யாழ்ப்பாண நகரின் மத்தியில் அமைந்து உள்ள வர்த்தக அச்சகம் ஒன்றிற்குப் பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள், தங்கள் திறமை, அனுபவம், ஆளுமை என்பவற்றை அத்தாட்சிப் படுத்தக்கூடிய சான்றிதழ்களுடன் நாளை சனிக்கிழமை காலை நேரில் வரவும்.

1. அச்சக முகாமையாளர்:

அச்சகத்தின் முகாமைத்துவப் பொறுப்பு முழுவதையும் ஏற்று, அதனைத் திறம்பட நடத்தக்கூடிய தகுதியும், முன் அனுபவமும் அவசியம்.

சுயேச்சையாக முடிவுகளை எடுத்துத் திட்டமிட்டு இயக்கிய அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

அச்சுத் தொழிலின் சகலமட்டத்தொழில் நுட்ப, அலுவலகப் பணிகளில் தேர்ச்சியுள்ளவர்களுக்கும், வாடிக்கையாளர் வட்டாரங்களைத் தெரிந்தவர்களுக்கும் முன்னுரிமைதரப்படும்.

தகுதி, திறமைக்கு ஏற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

2. அச்சுக்கோர்ப்பாளர்:

பயிற்சியும், முன் அனுபவமுமுள்ள ஆண்கள் நேரில் வரவும்.

வேகம், வேலைத்திறமை, அனுபவம் என்பவற்றைப் பொறுத்துச் சம்பளம் வழங்கப் படும்.

உதயன் விளம்பரப் பணிமனை,
15, 8 ஆவது ஒழுங்கை,
மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.


## மூன்று ஆண்டுகளில் எய்ட்ஸ் 'விசுவரூபம்'!

கொழும்பு, மார்ச் 3

இன்னும் மூன்று முதல் ஐந்து ஆண்டுகளில் இலங்கையில் எய்ட்ஸ் நோய் பூதாகாரமாக உருவெடுக்கும்என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எய்ட்ஸ் நோய் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள டாக்டர் பிரேம் மோஹன் முன்கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

'இந்த நூற்றுண்டில் கோர நிகழ்ச்சி'யாக எய்ட்ஸ் நோயை அமெரிக்கா கணித்திருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (உ எ

## கொல்வினின் பூதவுடல் நேற்றுத் தகனம்

கொழும்பு, மார்ச் 3

பழம் பெரும் அரசியல் வாதியான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் ஈமக்கிரியைகள் நேற்று மாலை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றன.

திரளான மக்கள் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி பிரேமதாஸ இரங்லுரை நிகழ்த்துகையில் இலங்கையின் சுதந்திரத்திற்காக முழு மூச்சுடன் உழைத்தவர் டாக்டர் கொல்வின் என்று சொன்னார்.

வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு அ. வரதராஜப் பெருமாள் தனது இரங்கலுரையில்-

தொழிலாள வர்க்க



கொல்வின்

நலன்களைப் பேண உழைத்தவர் டாக்டர் டீ சில்வா - என்ருர்.

திரு. பெர்னுட் சொய்சா (லசசக), திரு. கே பீ சில்வா, திரு. ஒஸி அபயகுணசேகரா திரு. மைத்திரிபல சேனநாயக்கா ஆகியோரும் உரையாற்றினர்.

(உ-எ)

## ஈரோஸ் பிரமுகர்கள் சென்னுடன் பேச்சு!

கொழும்பு, மார்ச் 3

ஈரோஸ் தலைவர் திரு. வே. பாலகுமார், பிரமுகர் திரு சங்கர் ஆகியோரையும் கொழும்பில் உள்ள இந்தியப் பிரதிநிதி தூதர் திரு ம்சென் சந்தித்துப் பேசவிருப்பதாகக் கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இதனிடையில் கடந்த செவ்வாய் ஈரோஸ் எம். பிக்கள் சிலர் பிரதித் தூதர் திருமம் சென்னைச் சந்தித்து வடக்கு.கிழக்கு அமைதி பற்றிப் பேசினர். (உ-எ)

## பயணிகள் காயம்!

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பஸ் மீது கடந்த புதன் அன்று கொள்ளையர் கோஷ்டி ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

இதனுல் இரண்டு பயணிகள் காயமடைந்தனர். (உ 10)

## நாடாளு....,

(1ம்பக்கத் தொடர்ச்சி)

10-30 மணிவரை ஒத்திவைக்கப்படும்.

புதிய உறுப்பினர்களை அவர்களின் பெயர்களைக் கூறியே சபாநாயகர் அழைப்பார்என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அங்குரார்ப்பண வைபவம் முடிந்த பின்னர் சபை இம்மாதம் 15 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்படும்.

அன்று வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப் படும்.

(உ-எ)

## வல்வையில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி]

வர். இவர்கள் இருவரும் மந்திகை ஊறணி அரசினர் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மோதல் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் சில வீடுகளும் சேதமுற்றன பயத்தினுல் இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் சில இந்தியப் படையினரும் காயமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது

(உ-160]

## வடக்கு..

தார்.

தமிழை ஆட்சிமொழியாக அமுல் நடத்தும் போது இப்பகுதியில் வாழும்சிங்கள மக்களின் உணர்வுகள் பாதிக்கப்படாதவாறு அவர்களுக்குரிய அந்தஸ்தை வழங்க நடவடிக்கை எடுக்கப் படும்என்றும் முதலமைச்சர் தெரிவித்தார். (அ)

## நூறு இணைப்பு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிய வருகிறது.

தற்பொழுது முதற் கட்டமாக நூறு தொலைபேசி இணைப்புக்களைக் கொண்ட பரிவர்த்தனைப் பிரிவொன்றை துரிதகதியில் அமைக்கும்படி பணிப்புரை வழங்கப் பட்டுள்ளது.

## மருத்துவ ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை ஏற்றுக் கொண்டது

இக் கல்லூரியில் சித்தி பெற்றவர்களுக்கு வட கொழும்பு மருத்துவக் கல்லூரி எம் பி. பி எஸ் என்ற பட்டமே வழங்கப் படும்.

வேறு பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்படாமல் சுதந்திரமான கல்லூரியாகவே இது இயங்கும்.

ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு வைத்திய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு விதிக்கப்பட்ட தகைமைகளின் அடிப்படையிலேயே இக் கல்லூரிக்கும் மாணவர்கள் [illegible]யப்படுவர். என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## முதலுதவிப் பரீட்சை

யாழ்ப்பாணம் மார்ச் 3

நல்லூர்ப் பிரிவு சென் ஜோன் அம்புலன்ஸ் பிரிவினரால் நடத்தப் படும் முதலுதவிப் பரீட்சை எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் (மங்கையர்க்கரசி) பாடசாலையில் பரீட்சை நடைபெறும். (ஒ)

## உணவில்.....

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து இணுவில் பகுதியில் உள்ள உணவுப்பொருள்களில் நஞ்சுத்தன்மை உள்ளதைக் கருத்தில் கொண்டு அவற்றை இனங்காண நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரியிடம் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

இதேவேளை செவ்வாய்க்கிழமைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் இப்போது சுகமடைந்து வருகிருர்கள்.

இவர்களில் ஐந்துபேர் சுகமடைந்து வீடு சென்றுள்ளார்கள்.

கடந்த வாரத்திலும் இணுவில்பகுதியில் மதுவ உணவு உட்கொண்ட 6 பேர் மயக்கமுற்ற நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சையின் பின் [illegible] என்பது குறிப்பிடத்தக்கது. (அ 5)

## ரயில்பாதை சேதம்

கொழும்பு, மார்ச் 3

மன்னருக்கும் செட்டிக்குளத்திற்கும் இடையில் ரயில் பாதையில் மதவிதிக்கு அருகில் நேற்று முன்தினம் காலை குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இதனுல் ரயில்பாதை சேதமடைந்தது. இத

## நடத்துனரின் முன் மாதிரி!

வடபிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த பஸ் நடத்துனர் ஒருவர் முன்மாதிரியுடன் நடந்து கொண்டார்.

பஸ்ஒன்றுக்குள்பயணி ஒருவர் தவறவிட்ட பதினையாயிரம் ரூபா பெறுமதியான நகைகள், பணம் அடங்கிய கைப்பை ஒன்று நடத்துனரால் கண்டெடுக்கப் பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நடத்துனரான திரு. ஏ. அன்ரு என்பவரே மேற்படி கைப்பையைக் கண்டெடுத்து டஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. என். ஆர். தனரத்தினம் முன்னிலையில் உரியவரிடம் ஒப்படைத்தார். (ஓ 10)

## தேர்தல் கடமைக் கொடுப்பனவு

தேர்தல் கடமையில் ஈடுபட்ட கல்வித் திணைக்களத்தைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் யாவரும் தத்தமது தேர்தல் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களை 10 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.

யாழ் கல்வித் திணைக்கள கணக்காளர் திரு. ஆர். சகுணதிரன் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். (ஓ-5)

## இல-இந்திய.....

(1ம் பக்கத் தொடர்ச்சி

வடக்கு-கிழக்குப் பகுதிகளிலுள்ள எல்லைப்புறக் கிராமங்களில் வசிக்கும் மக்களைப் பாதுகாப்பதற்குப் புதிய படை ஒன்றும் உருவாக்கப்படும்

இந்தப் படைக்கு அப்பகுதி ளிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள இளைஞர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

இலங்கை இராணுவத்தினர் இவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவார்கள் இவர்களுக்குத் தேவையான ஆயுதங்களும் வழங்கப் படும்.

— இப்படி அவர் கூறினுர். (உ- ஐ எ)

## தெற்கில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டனர்.

இரத்தினபுரியில் 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் நான்கு பேர் சகோதரர்களாவர்.

புதன்கிழமை மாலை முதல் நேற்றுக் காலை வரை ஊர்காவல் படையைச் சேர்ந்த நான்கு பேர் சுட்டுக் கொலைப் பட்டனர்.

இவர்களில் இருவர் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள். ஒருவர் சேருவிலையைச் சேர்ந்தவர். மற்றவர் ஹம்பாந்தோட்டையைச் சேர்ந்தவர் எனக் கூறப்படுகிறது, (ஓ-ஐ)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பேரம்பலம் யோகலக்ஷ்மி

புங்குடுதீவு கிழக்கு 9 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குழந்தைவேலு பேரம்பலம் என்பவரின் மனைவி யோகலக்ஷ்மி காலமாகி விட்டார். அன்னுர் அப்பன், திருமாறன், திருக்குறள் செல்வன், அருட்செல்வி, கலைச் செல்வி, தனலக்ஷ்மி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. சுந்தரலிங்கம்

9 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு: (9677)

### வேலாயுதர் இளையதம்பி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கந்தர்மடத்தில் வசிப்பவருமான திரு. வேலாயுதர் இளையதம்பி காலமானுர். இவர் மன்னுர் மனோன்மணி விலாஸ் உரிமையாளரும், அன்னப்பிள்ளையின் அருமைக் கணவரும், காலம்சென்ற நாகலிங்கத்தின் சகோதரரும். விநாயகமூர்த்தி. சந்திரமூர்த்தி. ஜெகதீஸ்வரமூர்த்தி நடேசமூர்த்தி, (ஜோமனி) வரலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம். இராமநாதன், V R M & Co.) சினனம்மாவின் மைத்துனரும் நாசராஜா (கனடா), புஷ்பமலர் அவர்களின் மாமனுரும் ஜெயதீபன், திரேஸ் குமார், சதீஸ்குமார, இந்திரகுமார், ஜெபரூபி, ஜெயமாலா, ஜெஷந்தா, ரசின் ஆகியோரின் பேரனுமாவார். இவரின் ஈமக் கிரியைகள் கோம்பையன்மணல் மயானத்தில் 3-3-89 இன்று வெள்ளிக்கிழமை காலை 11-00 மணியளவில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

283/13, புகையிரத வீதி
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
(9675)

### ஒலிவர் றிச்சேட்சன் செல்லத்துரை

ஒலிவர் றிச்சேட்சன் செல்லத்துரை [இளைப்பாறிய கடற்படை உத்தியோகத்தர்] காலமரணமானுர். இவர் ரூபி இரஞ்சிதராணியின் அன்புக் கணவரும், றெக்சி (U. K.) சிராணி, ஷேளி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னுரின் இறுதிச் சடங்குகள் 3 3-89 இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 2-00 மணியளவில் நடைபெற்று குடும்ப மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

கழுக்காவத்தை,
அல்வாய் மேற்கு,
அல்வாய்.
(9680)

தகவல்:
S. S. சதாசிவம்
(இளைப்பாறிய ஆசிரியர்

''விராட் விஸ்வப் பிரம்மனே நம''

### திரு. வேலுப்பிள்ளை பொன்னுச்சாமி

அம்மன் வீதி பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் விஸ்வப் பிரம்மகுல திலகருமாகிய திரு வேலுப்பிள்ளை பொன்னுச்சாமி அவர்கள் 2-3 89 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னுர் பாக்கியத்தின் அன்புக்கணவரும், நாகேந்திரம் (மெக்கானிக்) பரமேஸ்வரி, கமலாதேவி, பவளக்கொடி, பரலோகநாயகி, காலஞ்சென்ற பரலோகநாதன் (இ. போ. ச. கிளிநொச்சிச்சாலை), நித்தியானந்தன் (சுவிஸ்) மதியாபரணம், பற்குணராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினசிங்கம், பாலசுந்தரம், செல்வராசா, பாலசுப்பிரமணியம், தவமலர், உமாதேவி ஆகியோரின் அன்பு மாமனுரும், ரவி (கனடா) ரமேஸ் ரமணி, திருவருட்செல்வி, செந்தூர்ச்செல்வி, தாரணி மதுரா, தேனுகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னுரின் ஈமக் கிரியைகள் 3-3-89 இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் விளாவெளி மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்
பொ. நாகேந்திரம்

அம்மன் வீதி
பண்டத்தரிப்பு. (9726)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 3 - 03 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications (pvt.) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Friday 3rd March 1989


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org